# நங்கூரம்

ஓராண்டு நிறைவு மலர் - 1991

## இலட்சிய இதழ்



ஆசிரியர்: புதுநகரான்

அன்பளிப்பு: 10/-

— அராஜகத்தை தீயிட்டுக் கொழுத்துவோம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கியப் பரப்பில் 'நங்கூரம்' சரித்திரம் படைக்க
எமது பிருந்தாவன வாழ்த்துக்கள்!

**HUSSAIN STORES**

Dealers in Radio, Oilman Goods, Aluminium, Enamel, Perfumes & Fancy Goods.

KADURUWELA - POLONNARUWA.

*With the Best Compliments of*

**Kandy Medical**

Ayurvedic Drugs

*No. 604, Main Street,*
*Kaduruwela, Polonnaruwa.*

இலட்சியத்துடன் இலக்கியம் படைக்க
எமது வாழ்த்துக்கள்!

**HOTEL DE MAZOOMIYA**

MAIN STREET,
KADURUWELA - POLONNARUWA,
T. P. 027-2418

ஒரு நவயுக விடியலில் நங்கூரம்
சரித்திரம் படைக்க வாழ்த்துகிறோம்!

**FAZEENAZ**

Dealers in Fancy Goods, Textiles & Radio
175/A, MAIN STREET,
KADURUWELA - POLONNARUWA.
T. P. 027-2063

*Printed at M. J. M. Printers - Mawanella.*

நங்கூரம்
**NANGOORAM**

காலாண்டு
இலட்சிய இதழ்

\+ + + + +

மலர் 1
இதழ் - 6

\+ + + + +

ஜனவரி - ஏப்ரல்

\+ + + + +

ஆசிரியர்
ஏ. ஏ. அஷ்ரப்
(புதுநகரான்)

\+ + + + +

தொடர்பு
ஆசிரியர்
நங்கூரம்
S. T. S. ஹாட்வெயார்
ஸ்டோர்ஸ்
கதுருவெல
பொலன்னருவை

\+ + + + +

Editor:
A. A. ASHRAF
(Podunakaran)
S. T. S.
Hardware Stores
Kaduruwela,
Polonnaruwa.
T. P. 027 2147

# ஆசிரிய பீடம்...

இலக்கிய நெஞ்சங்களோடு சில நிமிடங்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே சர்வ புகழனைத்தும்! நாட்டில் இடம் பெற்று வரும் கசப்பான சம்பவங்களினாலும்கடந்த காலங்களில் குறிப்பாக கிழக்கே எமக்கு ஏற்பட்ட அசௌகரியங்களினாலும் "நங்கூரத்தின்" ஆண்டு மலரை குறிப்பிட்ட கால எல்லைக்குள் வெளியிட முடியாமல் போனமையிட்டு வருத்தம்தான்.

எனினும் எமது இலக்குத் தவறாமல் கொண்ட இலட்சியத்தோடு உங்கள் மத்தியில் ஒராண்டு நிறைவு மலராக "நங்கூர" மிடுவதையிட்டு எனதுள்ளம் மகிழ்வில் நிறைவடைகிறது.

எமது இலட்சியப் பணிக்கு மனமுவந்து ஆக்கமும், ஊக்கமும், தளராத ஆதரவும், வழங்கிய இலக்கிய உள்ளங்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும். வேற்றுமொழி பேசுகின்ற மாவட்டத்திலிருந்து தமிழ் இலக்கிய சஞ்சிகைக்கு உயிரூட்டுவதென்பது எவ்வளவு சிரமமான காரியமென்பது சஞ்சிகையொன்றை வெளியிட்ட அனுபவமுள்ளவர்களுக்குப் புரியும்.

படைப்பாள நேஸங்களே! அராஜகர்களின் தீயில் எரிந்துகொண்டிருக்கும் சமுதாயத்தை சமாதான மைதானத்திற்கு அழைத்துச் செலவோம். சீரழியும் சமுதாயத்தை சீர்திருத்தி விழிப்படையச் செய்வோம். இலட்சிய தாகமகொண்ட இலக்கிய நெஞ்சங்களே! நீருபூத்த நெருப்பாகத் தொடரும கசப்புணாவுகளை வெல்லும்; எரியும் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும், உணர்வூட்டக்கூடிய காத்திரமான படைப்புகளைத் தாமதமின்றி வழங்குங்கள். அலை மோதுகின்ற மக்கள் சமுத்திரத்தில் அசையாது நங்கூரமிடட்டும்.

இம்மலரைச் சிறப்பிக்க விளம்பரங்களையும், அன்பளிப்புக்களையும், ஆலோசனைகளையும், ஆக்கபூர்வமான படைப்புக்களையும், வழங்கி உதவியோர்களுக்கும், நங்கூரத்தின் வளர்ச்சியில் அக்கரைகொண்டு உதவிய குறிப்பாக, தினகரன், வீரகேசரி, ஆசிரியர் குழுவிற்கும், மற்றும் சகோதர சஞ்சிகை ஆசிரியர் குழுவிற்கும், அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், தோழோடு தோழ் நின்று சலிக்காது உதவிய நண்பர் கல்ஹின்னை M. C. M. முஹாஜிரீன் அவர்கட்கும், சகதோழர்களுக்கும், இலக்கியத் தோழர்கள் அனைவருக்கும் மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும் உங்களின உயிரோட்டமான ஆதரவோடு நங்கூரத்தின் வளர்ச்சி தொடரட்டும் . . . .

நன்றி - ஆசிரியர்

---

# வாழ்த்துச் செய்தி

ஆசிரியர்
நங்கூரம்

மேமன் கவி
மூன்றாம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11.

அன்புடையீர்!

தங்கள் "நங்கூரம்" இதழ் இதுவரை றோனியோ இதழாக மலர்ந்து இன்று அச்சு வாகனம் காண்கிறது. இவ்வளர்ச்சியினையிட்டு எனது வாழ்த்துக்கள்!

இவ்வாறான ஒரு சஞ்சிகை நடத்தும் பணி சிரமம் வாய்ந்தது என்பது நாம் அறிவோம். இவ்வாறான சிரமங்களின் மத்தியிலும் "நங்கூரம்" இதழ் வெளியீட்டில் தாங்கள் இறங்கி இருப்பது பாராட்டக்கூடியது.

எதிர்காலத்தில் "நங்கூரம்" பல ஆக்க பூர்வமான கனதியான விடயங்களை தாங்கி ஈழத்து தமிழ், கலை, இலக்கிய உலகின் இளைய தலைமுறையினரின் சிறப்பான ஒரு களமாக திகழ வேண்டும் எனும் எனது அவாவினை முன்வைத்து மீண்டும் எனது வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறேன்.

பிரியங்களுடன் உங்கள் - மேமன்கவி



## நங்கூரத்தின் பார்வையில் . . . .

# பொலன்னறுவையில் ஓர் "தம்மன்கடுவ."

நங்கூர வாசகர்களை சற்று வித்தியாசமான பக்கத்திற்கு அழைத்துச்செல்ல ஆசைப்படுகிறேன். எமது சஞ்சிகை நங்கூரமிட்டுள்ள பொலன்னறுவைப் பிரதேசத்தைப் பற்றிய அறிமுகத்தை சுருக்கமாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

இலங்கையின் வரலாற்றிலே சர்வதேச உல்லாசப் பயணிகளால் கவரப்படும் புராதன நகரங்களில் ஒன்றுதான் பொலன்னறுவை நகரம் என்பது யாவரும் அறிந்த மறைக்க முடியாத உண்மையே.

அன்னிய பிரதேசங்களைச் சேர்ந்த அநேகமானவர்களின் கணிப்பு பொலன்னறுவையென்றால் சிங்களவாகளை மாத்திரம் கொண்ட பிரதேசம் என்பதேயாகும். இது பொதுவாக தப்பான ஓர் கணிப்பீடென்றே இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். இங்கு தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் செறிந்து வாழுகிறார்கள் என்பதை எமது நங்கூர வாசகர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மன்னர்கள் ஆட்சிசெய்த காலத்திலிருந்தே முஸ்லிம்களுக்கு "தம்மன்கடுவ" என்ற பிரதேசம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

திருக்கோணமடு முதல் பள்ளித்திடல் வரை எல்லையாகக் கொண்ட பிரதேசமே "தம்மன்கடுவ" என அழைக்கப்பட்டு வருகிறது. இது பள்ளித்திடல், பங்குறான, சுங்காவில், தம்பாள, ஓணாகம, புதூர், திவுளான, முஸ்லிம் கொளனி, மாணிக்கம் பட்டி, கதுறுவெல, கல்லலை, அழிஞ்சிப்பொத்தான, கட்டுவன்வில ஆகிய முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கியதாயுள்ளது.

முற்காலத்தில் மேற்குறிப்பிட்ட கிராமங்கள் ஒரு கிராம சபையின் கீழ் இயங்கி வந்துள்ளது. 'திவுளான' என்னும் கிராமத்திலேயே கிராம சபைக் காரியாலயம் இயங்கி வந்துள்ளது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் மதிப்புக்குரிய "குண்டப்பா ராவுத்தர்" அவர்கள் கிராமசபை (சேர்மர்) கிராமசபைத்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராக இருந்து ஆற்றிய அளப்பெரிய சேவையின் பிரதிபலனே இந்த முஸ்லிம் கிராமங்கள் தோன்றக் காரணமாக அமைந்தது என்பதைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இவருடைய ஆட்சிக் காலத்திலேயே எலிசபெத் மகாராணியின் தந்தையான 2 வது ஜோர்ஜ் மன்னர் இலங்கைக்கு வருகை தந்த வேளை பொலன்னறுவைக்கும் சமூகமளித்திருந்தார்' அவ்வேளை மதிப்புக்குறிய குண்டப்பா ராவுத்தர் அவர்களே 2 வது ஜோர்ஜ் மன்னரை வரவேற்று உபசரித்துள்ளார் என்பதை இவ்விடத்தில் தெளிவு படுத்த விரும்புகிறேன். இச்சம்பவத்தைச் சான்றாக எடுத்துக்கொண்டால் "தம்மன்கடுவ" யில் முஸ்லிம்கள் தொன்று தொட்டே வாழ்ந்து வருகிறார்கள் என்பதைக் குறிப்பிடலாம்.

இங்கு வாழுகின்ற மக்கள் குடியேற்றத் திட்டங்களின் அமைப்பால் குடியேற்றப் பட்டவர்கள். அதிகமான முஸ்லிம்கள் கண்டி மாவட்டத்திலிருந்தும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தும் குடியேற்றப்பட்டவர்கள்.

ஏறத்தாழ 1800 ம் ஆண்டளவில் "திவுளான" எனும் இடத்தில் ஓர் முஸ்லிம் பாடசாலையும் "மன்னம்பிட்டி" என்னுமிடத்தில் தமிழ்ப்பாடசாலையும் நிறுவப்பட்டது. காலப்போக்கில் இன்னும் சில ஆரம்பப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்று இரண்டு முஸ்லிம் மகா வித்தியாலயமும், ஒரு முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயமும் உருவாக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசு காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஃமூத் அவர்கள் அயராது எடுத்த கடும் முயற்சியினால் அதிகமான பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்யப்பட்டது. எனினும் அவ்வேளை சேவையாற்றிய நிருவாகம் சரியாக இயங்காததால் அவ்வுதவிகளையும் முஸ்லிம் பாடசாலைகள் பெறத்தவறிவிட்டன.

இங்கு அதிகமானவர்கள் விவசாயிகள், மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள் உள்ளார்கள். கல்வித்துறையில் இன்னும் பின்தங்கிய பிரதேசமாகக் கருதப் படுகிறது. பின்னடைவுக்குக் காரணம் படிப்பறிவற்ற தாய், தந்தையர்களின் பொடுபோக்கும், பொருளாதாரப் பிரச்சினையும் போதிய ஆலோசனையும் கிடைக்காமையுமே.



இன்று பொலன்னறுவை மாவட்டத்தில் 5 பாராளுமன்ற உறுப்பினர்களில் 4 சிங்கள சகோதரர்களும் 1 முஸ்லிம் சகோதரரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் குறிப்பிட்டுக்கூற வேண்டிய விடயம் ஒன்றைக் கவனத்தில் எடுக்கிறேன். முஸ்லிம் கொளனி என்ற பிரதேசத்திற்கு இதுகாலவரை முஸ்லிம் 'மையவாடி' ஒதுக்கப்படாதது மாபெரும் குறையே. இதுபற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்காதது மனதை வருத்துகிறது.

தகவல் – P. M. மீரா சாஹிப்-கல்வி அதிகாரி பொலன்னறுவை

---

## உதிரம் சிந்தும் உழைப்பாளி

பாரினிலே பகலவன் பாய் விரித்திருக்க
பாவையரின் பட்டுக் கரங்களோ நாளும்
பச்சை மலை மீதினிலே நிமிர்ந்திருக்கும்
பசுந்தளிரைத் தழுவி நிற்கும்!

\+ + +

உறைக்கும் வெய்யில் வந்தாலும்
உதிரம் வியர்க்க உழைக்கும்
கன்னியரின் வாழ்வு தினம்
கண்ணீரில் கரைந்து போகும்!

\+ ÷ +

கொட்டும் மழையிலும், வாட்டும் பனியிலும்
கொழுந்து பறிக்கும் கோதையர்களின்
தேகம் என்றும் மலையகத்தில்
தேயிலைக் கொய்தே உருகிப் போகும்!

\+ + +

கூடையினை முதுகில் சுமந்து
கூடியிருக்கும் ஏந்திழையரின் சரீரம்
வளைந்து நிமிர்ந்து இருப்பது போல்
வாழ்க்கையும் கேள்விக் குறியாய் நிற்கும்!

\+ + +

தளிரினை நாளும் கொய்தப் போதும்
தளர்ந்த உடலில் ஊக்கம் இல்லை
நாடு ஆக்கம் பெற்று உயர்ந்திட
நங்கையரே "உதிரம் சிந்தும் உழைப்பாளி"யானார்!

– செல்வி பி. கிருஷ்ணா – பொகவன்தலாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய நயம்

— வாழைச்சேனை அமர் —

இலக்கியத்தில் கவிதை வடிவத்தைப் போல, உரை நடை வடிவமும், உணர்ச்சியை சொல்லக் கூடியது. ஆனால் மக்களின் நெஞ்சோடு நெஞ்சாய் வாழ்ந்து நிலைப்பதற்கு மக்களின் நயக்கும் மன நாட்டமே காரணம். அவ்வாறு நயப்பதற்கு பல காரணங்களில் கவிதைப்பொருள் முக்கியத்துவம் பெறுகிறது.

கால நிலைக்கேற்ப, தேவைக்கேற்ப, குறிப்பிட்ட சில பொருட்கள் குறிப்பிட்ட காலத்தில் முனைப்பு பெறுகின்றன. அந்த முனைப்பை பிரதிபலிக்கும் படைப்புக்கள் மக்கள மனதை இலகுவாக கவர்ந்து விடுகின்றன. சூழ்நிலை மாறியவுடன் மனப் பாங்கை விட்டு குறிப்பிட்ட கவிதை ஒதுக்கப்படவும் கூடும். திரும்பத்திரும்ப அதே பொருளை வைத்துக்கொண்டு கவிதை படைத்தாலும், சில கவிதைப் படைப்புகள் ஒதுக்கப்படலாம். ஆனால் பல கவிதை இலக்கியங்கள் மக்கள் மத்தியில் பல நூற்றாண்டுகளாக நிலைப்பதற்கு காரணம் என்ன?

பொருள் மாறுபாடு. கருத்துக்கள் ஒவ்வாமை இவைகள் இருப்பினும் சில கவிதைகள் ரசிகத் தன்மையை தாங்கி நிற்கின்றன. காரணம் அது கொண்டிருக்கும் உணர்ச்சித் தன்மையாகும். ஒரு கவிதையில் நயத்தல் அனுபவிக்கும் தன்மை அந்த உணர்வு எவ்வாறு கூறப்படுகிறது என்பது முக்கியமானதாகும். நயப்பதற்கு கவிதையில் கூறப்பட்ட பாங்கு முக்கியம் பெறுகிறது.

ஒரு கவிதையில் உணர்ச்சி புலப்படுத்துவது முக்கியமானது. அந்த உத்தி முறை உருவகமாகவோ, உவமையாகவோ. குறியீடுகளாகவோ, சொல்லாற்றல் உள்ளதாகவோ இருக்கலாம். இவ்வுறுப்புக்கள் கவிஞர் கூற வந்த பொருளை சொல்வதில் என்ன பங்கு வகிக்கிறது? எவ்வாறு துணை புரிகிறது? அவற்றின் பொருத்தப்பாட்டால் உண்டாகும் அழகென்ன? இவைகளை அறிந்து அனுபவங்களோடு தொடர்பு படுத்தி நோக்கலாம். இவைகளையறிந்து சுவைப்பதை "இலக்கிய நயத்தல்" என்கிறார்கள்.



நயத்தல் தொடர்பான பயிற்சி பழக்கத்தினால் ஏற்படுகிறது. கவிதைச் சுவை ஆழமான பயிற்சியில் பிறக்கிறது. அப்போது கவிதை சொன்ன கருத்தை ஊன்றி ஆழப்பார்வையிட முடியும். ஒரு கவிதையில் பொருளையும், உவமை, குறியீடு, சொல்லாட்சியையும், பொருத்தமின்மையையும், கருத்து மோதலையும், தேடித்துருவி ஆராய்ந்து பார்த்தால் இலக்கிய நயம் முழுமை பெறுகிறது.

இலக்கிய நயத்தலை பல்வேறு பகுதிகளிருருந்து பலரும் பிரித்து நோக்குவர்.

1 முதற்கண் கவிஞன் கூறவந்த கருத்து எதனை புலப்படுத்துகிறது

2 அதனை புலப்படுததும் விதம்

3 அவன் கூறுவதில் உள்ள சிறப்புக்கள்

"தலையின் இழிந்த மயிரணைவர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை" குறள்

1 கூறவந்த பொருள்:- "தமது ஒழுக்க நிலையிலே தவறிய மாந்தர் பிறறால் இகழப்படும் நிலையை அடைவார்கள்"

2 கூறும் விதம்:- ஒழுக்க்ம் தவறிய மாந்தருக்கு தலையில் இழிந்த மயிரை ஒப்பிடுகிறான்.

3 உவமைச் சிறப்புக்கள்:- மயிர் இழிவான பொருளாயினும் தலையில் இருக்கும் போது அது பல சிறப்புக்களைப் பெறுகிறது எண்ணை மருந்து வகைகளை தடவி பாதுகாக்கின்றோம். உதிர்ந்து விடாமல் இருக்க முயல்கின்றோம். வாரிக் கட்டி அழகு செய்கின்றோம். நீண்ட முடியைக் கொண்ட பெண்கள் அதனைக் காண்பித்து பெருமை அடித்துத் திரிவர். *But* உதிர்ந்த முடியை எடுத்து எந்தக் கவலையுமின்றி வீசி எறிகின்றோம். சாப்பாட்டில் முடி கிடந்தால் "இது எனது முடியில்லை" என்றும் பொய் சொல்லி மறுக்கிறோம். இப்படி மயிரைப்பற்றி நாம் உயர்வாக எண்ணி அதன் உதிர்வு நடவடிக்கையில் மாறி நடக்கிறோம். இதே போல பல உதாரணங்களைக் காட்டலாம்.

✶ ✶ ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீராத முயற்சி

– இக்பால் அலி

தலையீடியோடு வந்த
தலைவிதி
மனசுக்கு தினம் தினம்
நெருப்பையல்லவா
அள்ளிக் கொட்டுகின்றன.

+ + +

சற்றுக் காற்று
நிரந்தரமாகத்
தூங்கப் போனால்
இடைவழியில்
பல பல
துப்பாக்கி ரவைகளின்
வெடி யோசைகள்
கலந்து விடுகின்றன.

+ + +

தெருப்பில்
தனலாய்
எரிந்து தீரவேண்டிய
தீய திரிகளுக்கு
ஆயுள் நீண்டதால்
முடிவில்லாத சிக்கல்கள்

இன்று
உதயமாகும் சூரியன்
நமக்கு எவ்வித பலனையும்
தரக்கூடியதாயில்லை.

+ + +

தாகம் தணிப்பதற்கு
நீர்த்தடாகத்தில்
எஞ்சியிருந்தவை கூட
தீர்ந்துவிட்டது

+ +

ஈவிரக்கம்
காட்டாத
இந்த சூரியன்
இருந்து
நமக்கு என்ன பயன்

+ + +

இந்தச் சூரியனுக்கு
அர்ச்சனை செய்வதை
இடை நிறுத்தி விட்டு
புதிய சூரியன் ஒன்றை
உருவாக்க
தீராத முயற்சி செய்யுங்கள்.

*With Best Compliments From:*

**MAXELL HARDWARES**

Dealers in Hardware, Building Materials,
Lanka Wall Tiles Etc.

108, Main Street, KATTANKUDY.

T. Phone: 065 - 2077



## சீதனச் சிறை

கலை நதி பதியதளாவ கே. எம். பாறூக்

பெண்ணாகப் பிறந்து விட்டாலிங்கு
பெருஞ்சுமைதா னென்று நித்த மேங்கிக்
கண்களிரு கலங்கிக் கால மோட்டிக்
கரைசேர வழியின்றிக் காத்து நிற்கும்
பெண்ணினத்தின் தலைவிதியை சற்றுக் கொஞ்சம்
பெருமனம் வைத்துப் பார்த்தால் தெரியும்
மண்ணிலே உதிர்ந்த மலராய்க் கிடக்கும்
மங்கையர் வாழ்வை மாற்றி வைப்போம்

வரதட்சணை என்ற நாமத் தோடு
வந்ததனால் அந்தச் சீர் வரிசை
கரம் பற்றத் தடையாக நிற்பதனால்
கன்னியர் பட்டியலோ இங்கு நீளம்
வரமாகக் கிடைக் கின்ற மனையாளை
வைரமாய் நினைத்து இணைத்து வாழ
உரம் பெற்ற உள்ளங்கள் இருக்குமானால்
உயர்வாகப் பெண்ணின் வாழ்வு மலரும்.

வீட்டுக்கு விளக் கேற்ற வருமவளுக்கு
விலையாகிப் போய் நின்று அடிமையாகி
துட்டுக்கு ஆசையாகித் துணையைப் பெற்று
துய்த்திடும் வாழ்க்கையில் என்ன பெருமை
சாட்டுக்கள் சொல்லித் தப்பிக் கொள்ள
சரித்திரத்தை மாற்றுவது முறையே இல்லை
நாட்டங்கள் நல்லதாய் இருக்கு மானால்
நங்கையர் வாழ்வு இங்கி னிக்கும்

தாலிதான் பெண்ணுக்கு வேலி என்று
தத்துவத்தை உரைப்பதிலே ஞானி யாகி
போலிக்கால் வாழுகின்ற வாழ்வை என்றும்
புகழ்வார்கள் யாரும் இங்கு உண்டோ?
கூலிக்கு மாரடிக்கும் கொள்கை யானால்
கூடிய நல்லவைகள் ஒன்றுமில்லை
தாலிக்கு கொடுத்து நல் மதிப்பை
தாரத்தை ஏற்று வாழ வைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வெளிச்சத்துக்காக

இது
என்ன இருட்டு
எங்கள் பூமியில்?

★ ★ ★

சுதந்திரம் என்பதும்
மனுவுரிமை என்பதும்
எங்கள் சாசனங்களில்
எழுத்துக்களில் மாத்திரம்
நின்றுக் கொள்வதன்
மாபெரும் மர்மம் என்ன?

★ ★ ★

பிணவாடைகளும்
மரண சேதிகளும்
புத்தரின் மாதங்களின்
சரணடைந்து விடுவதனால்
தர்ம சேதிகள்
தாரைவார்க்கப்படுகிறதல்லவா?

★ ★ ★

எங்களில் எவராவது
வெளிச்சங்களுடன்
சுகம்காண முன்வருவார்களா?

★ ★ ★

இழந்த உரிமைகளைப்
பற்றி யோசிக்காதே?
இருக்கும் உரிமைகளுக்காக
வாய்மூடி இருக்காதே

★ ★ ★

இளைஞர்களே
எங்கள் மண்ணில்
எங்களால் இனி ஒரு
சுதந்திர விடுதலையை
நிர்ணயிப்போம்!

– நிதானி தாஸன்
(பேராதனை வளாகம்)

# இரவுகள்.

தூங்கிவிட்ட
கங்குல் இரவுகளின்
கனமான நிஸப்தங்கள்
இரவு ராணிகளின்
வருகைக்குப் பின்பே
கலகலப்பாகின்றன.

★ ★ ★

பகலில்
பெட்டித்தனமாய்
கெட்டிப்போன
எமது ஏக்கங்கள்
அடங்கிப்போன
துயரங்களின்
அமைதிகள்
இரவுகளில்
கண்ணீர் துளிகளால்
அருவடையாகின்றன.

★ ★ ★

பகற் பொழுதுகளில்
பதுங்கக்கூட
இடங்கிடைக்காத
''பிளாட் பார''
பிச்சைப் பறவைகள்
அனுமதிச் சீட்டுக்களின்றி
இரவுகளில்
நினைத்த இடங்களில்
கலர் கலராய்
கறை காண்பார்கள்.

★ ★ ★

ஹும்
இந்த இரவுகள்
எவ்வளவு
இரம்மியமானவை.

திக்வல்லை – நஸீஹா ஆமீர்



உருவகக் கதை

# அறிவின் பெருமை

— செல்வி சம்சுன்னிஸா அபூபக்கர் —

அந்த அழகான கண்ணாடி பதித்த மேசை இலாச்சுக்குள் புதிய நூறு ரூபாய் நோட்டுக்கள் கலகலப்பாய் அலவலாவிக் கொண்டிருந்தன. அப்போது திடீரென அது திறக்கப்படவே அவை மௌனமாக நோக்கின, இன்னும் சில நோட்டுக்கள் அதற்குள் திணிக்கப்படவே அவை அன்புடன் அவற்றினை வரவேற்று, தன்பால் சேர்த்துக்கொண்டன. சற்று நேரத்தில் ஒரு பழைய புத்தகமும் அதிலே இடப்பட்டு இலாச்சு மூடப் பட்டது.

புத்தகத்துக்குக் கீழே அகப்பட்டுக்கொண்ட ரூபாய் நோட்டுக்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பக்கத்தே யிருந்த நோட்டுக்களுக்கும் எரிச்சல் ஏற்பட்டு முணுமுணுக்கத் தொடங்கின. சீ, உடையைப்பாரு; வடிவைப்பாரு; என்ன அசிங் கமான உருவம், எமக்கிட்ட நெருங்கவே தகுதியில்லை. எமக்கு மேல் நீ இருக்கவே தகுதி இல்லை; எங்கட பெறுமதிக்கும். மதிப்புக்கும் உனக்கு என்ன இங்கு வேலை? போ......... சீக்கிரம் போய்விடு இவ்வாறு நோட்டுக்கள் அப்பழைய புத்தகத்தைப் பார்த்துக் கேவலமாய் பேசித் தீர்த்தன.

புத்தகமோ தனக்கேயுரிய அடக்கத்துடனும் நிதானத்துட னும் ''நண்பர்களே நீங்கள் புதிய நோட்டுக்கள்தான், ஆனால் நானோ பழைய ஒரு புத்தகம்; நீங்கள் பெறுமதியுடையவர்களும் தான்; அதை நான் மறுக்கவில்லை, ஆனால் ஒவ்வொருவருக் கும் ஒவ்வோர் விதத்தில் மதிப்பும், தகுதியும் உண்டு; நண்பர் களே! சற்று சிந்தித்து நிதானமாகப் பேசுங்கள்'' எனக் கூறி விட்டு அது தன்பாட்டில் இருந்தது.

அதனைக் கேட்ட நோட்டுக்கள் ''அகம்பாவத்தைப் பாரு தான் பெரிய அறிவை நிரப்பியிருக்கும் அறிவாளி என்ற எண் ணம் போலும், எம்மோடு உமகுக் கதைக்கத் தகுதியில்லை. தூரப் போய் விடு'' இவ்வாறு உறுமின. அப்போது பார்த்து அங்கே நுழைந்த இரு மனிதர்கள் எதையோ பற்றி அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலவலாவிக் கொண்டிருந்தனர்: பின் திடீரென மேசை இலாச்சினைத் திறந்த முதலாம் ஆள் நூறு ரூபாய் நோட்டுக்களை ஒழுங்காக எண்ணி அடுக்கி அடுத்த நபரின் கைகளில் திணிக்க நொடிப் பொழுதில் அவனோ தீப்பொறி பறக்க நெருப்பை மிதித்தவன் போல் எழுந்து அந்த நோட்டுக்களை அப்படியே கீழே சிதறிவிட்டு தடார் என வெளியேறினான். இதனை எல்லாம் எதிர்பாராத முதலாம் நபர் வெறித்துப் போனவனாய் வெறுமனாய் இருந்த இலாச்சினுள் கையைவிட அந்தப் புத்தகம் கைகளில் மோத எதையோ சிந்தித்தவனாக அவன் புத்தகத்தின் சில பக்கங்களைப் புரட்டினான். திடீரென அப்பக்கத்தில் அவனது கண்கள் நிலைகுத்தி நின்றன.

ஆம்; அந்த வாசகத்தை அவன் தன்னையும் மீறியவனாகி வாசித்தான். 'பணத்தினால் உன் குறையை நீ மறைக்க முயன்றாலும் அது ஒரு நாள் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்; ஆயினும் அறிவினால் வழி காட்டப்படும் ஒருவன் நெறி தவற மாட்டான்' அவன் அந்த வார்த்தைகளினால் அகம் தெளிந்தவனாகப் புத்தகத்தை மார்போடு அணைத்துக்கொண்டு அங்கே 'தொப்' என அமர, நோட்டுக்களுக்கோ இதனைப் பார்க்க சகிக்கவில்லை. என்றாலும் உண்மை நிலை உணர்ந்தனவாக வெட்கித் தலை குனிந்து மௌனமாகின. அவற்றின் நிலையறிந்தோ என்னவோ அங்கே வந்த காற்றும் இவற்றை வீசி எறிந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கியது. "இனியாவது நீங்கள் அறிவு பெறுவீர்களா? அப்போதுதான் நீங்கள் முழுமையான பெறுமதியடைவீர்கள்" என்று புத்தகம் அவற்றிற்குச் சொல்வது போன்றிருந்தது

## தண்டவாளங்கள்.

ஸில்மியா நியாஸ்
தர்ஹாநகர்

எம் இருவரையும் அனைவரும்
தண்டவாளங்கள் என்றார்களோ!
என்னதான் இதன் கருத்து என்றாயே!
இன்று கூட அறியவில்லையா?.........
இரு தண்டவாளங்கள் என்றும்
ஒன்றினைவதில்லையே!
நானும் நீயும் இரு தண்டவாளங்கள்



சிறுகதை

# நெருப்பில் பூத்த மலர்கள்.

— புதுநகரான் —

அழுதழுது அவளின் கன்னங்கள் நன்றாகவே வீங்கிப் புடைத்துப் போயின. வறுமையின் பிடியில் துவண்டுபோன சாயல் தெரிகிறது. தனக்குக் கிடைத்த துயரத்தின் உச்சிக்கே சென்றதால் நெஞ்சையுருக்கி கண்ணீரால் கழுவுகிறாள். உள்ளத்தில் புதைத்து வைத்திருக்கும் இளப்பைத் தாங்க முடியாமல் எலும்பும், தோலுமாய் ஒட்டிய வயிறோடு அப்படியேயொடுங்கி "இத்தா" எனும் கடமைக்காக உயிர் வாழுகிறாள் பாத்திமா.

அவளின் வரண்டு போன வாழ்க்கையில் இடையிலே ஏற்பட்ட பாலைவனப் புயலில் சிக்கித் தவித்த துன்பத்தில் துவண்டு போயிருந்தாள். ஒரு துண்டுப் பாயில் ஒடடிக்கொண்ட அவள் முன்னாலிருந்த வெற்றிலைத் தட்டை தன்னருகே, எடுத்துக் கொண்டு சுவரோடு சேர்ந்தாற் போல் சாய்ந்து கொண்டாள். வெற்றிலையை அசைபோட்ட வண்ணம் கடந்தகால நினைவுகளை மீட்டிப் பார்க்கத் தொடங்கினாள் பாத்திமா!

காதர் காக்கா என ஊரவர்களால் செல்லமாக அழைக்கப் படுபவர்தான் பாத்திமாவின் கணவர். இவர்களுக்கு இரண்டு பெண்கள், பருவ வயதை அடைந்தவர்கள்: ஒரே மகன்: இளையவன் சிறிசவன் காதர் காக்கா வயதில் முதிர்ந்து உடம்பு சோர்வடைந்து அவரால் கூலி வேலை எதுவும் செய்ய முடியாத நிலையில் தான் இருந்தார். தன்னால் முடிந்தளவு சிறுதொகை பணத்தை வைத்துக்கொண்டு ஊர் மார்கட்டில் சிறிதாக மரக்கறி வியாபாரம் செய்து வந்தார். அதில் கிடைத்த சிறு வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார். திடீரென தலைதூக்கிய பயங்கரவாதப் பிரச்சினையால் வியாபாரமும் செய்ய முடியாமல் போய்விட்டது.

இதுவரை கிட்டிய சிறு வருமானத்தைக்கொண்டு வயிற்றைக் கழுவிய காதர் காக்கா குடும்பம் மிகவும் பெரிய வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தது. வீட்டிற்குள்ளே வயதுக்கு வந்த குமர்களை வைத்துக்கொண்டு எப்படி கரை சேர்க்கப் போறேன் என்ற தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தார். காதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கா. இவரின் மனதில் முறுக்கேறியிருக்கும் கஷ்டங்களின் அவலத்தைக் கூர்ந்து அவதானித்த மூத்த மகள் ஓர் முடிவுக்கு வரலானாள். தான் வெளிநாடு சென்று உழைத்தாவது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற உறுதியோடு தாயிடம் விடயத்தைச் சொல்லி வாப்பாவிடம் விடயத்தை ஒப்புவிக்கச் செய்தாள். மெதுவாக, பாத்திமா நெருங்கி "உங்களைத்தான், நாங்கள் இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால் எதுவும் நடக்காது. நம்மட மூத்தவள வெளிநாடு அனுப்பினா"...........? என ஆரம்பித்தாள்.

அவரோ எதையும் கவனத்தில் எடுக்காத மாதிரி நீண்ட சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். சிந்தனையைக் கலைத்தாற்போல் உம்மாவுக்குப் பின்னாலிருந்து குரல் கொடுத்தாள் மூத்த மகள். "ஓம் வாப்பா நான் வெளிநாடு போய் உழைச்சி குடும்பத்தைக் காப்பாற்றத் துணிஞ்சிட்டேன். நீங்கள் என்ன சொல்லுவீர்களோ? என்றுதான் இது நாள்வரை மௌனமாயிருந்தேன்".

இப்பவெல்லாம் நம்ம ஊரில் எங்களைவிட எவ்வளவு உசத்தியானவங்கனெல்லாம் வெளிநாடு சென்று உழைத்துப் பணம் அனுப்பவில்லையா? ஏன் என்னால் முடியாது? என்று கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தாள். உம்மாவும் அதற்கு ஏற்றாற் போல் ஆதரவு கொடுத்துப் பேசினாள்.

ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்தாலும், அன்றைய குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு மகளின் வேண்டுகோளை அரை மனதுடன் ஏற்றுக்கொண்டார். அடுத்த வீட்டு நண்பரின் உதவியுடன் பாஸ்போட் எடுப்பதற்காக கொழும்புக்குப் போக ஆயத்தமானார்; மட்டக்களப்பிலிருந்து புகையிரதம் செல்லவில்லை என்பதால் தனியார் வான் ஒன்றில் பயணத்தைத் தொடர்ந்தார். பாத்திமாவும் வழியனுப்பி வைத்தாள். எத்தனையோ ராணுவப் பரிசோதனைக் கடவைகளில் இறங்கியும், ஏறியும் நடந்தும் களைத்துப்போய் கொழும்பைச் சென்றடைந்தார். நண்பரோ தேவையான உதவிகளைச்செய்து பாஸ்போட்டை எடுத்து வெளிநாட்டு முகவர் ஒன்றிடம் பாஸ்போட்டைக் கொடுக்கவும் ஒத்துழைப்பு வழங்கியதால் காதர் காக்காவுக்குச் சிரமம் எதுவும் இருக்கவிலலை. முகவர் நிலையத்தால் பின்னர் அறிவிப்போம் என்றதும் ஊர் திரும்பிவிட்டார்.

நாட்கள் வாரங்களாகி மாதம் ஒன்றையும் விழுங்கி நின்றது. அன்று திடீரென ஓர் தந்தி வந்திருந்தது. உடனே மகளை குறித்த தினத்திற்கு, குறிப்பிட்ட பணத்துடன் வந்து சேரவும் என்றிருந்தது. காதர் காக்கா உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து போனார். அவரின் உழைப்பில் ஒரு சதமும் மீதம்



இருக்கவில்லை. விலைபேசி விற்கக்கூடிய பொருள் எதுவும் இருக்கவில்லை. அவரின் வாழ்வில் உழைத்த உழைப்பில் மீதமாயிருந்தது இரண்டு பவுன் சங்கிலி ஒன்றே. அதை விற்று பணத்தைக் கட்டுவோம் என்ற மகிழ்வோடு கைச்செலவுக்கு நண்பரிடம் கைமாற்றாக சிறிதளவு பணத்தையும் பெற்றுக்கொண்டு மகளையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்குப் பயணமாகிறார்.

மூன்று நாட்கழித்து மகளை 'குவைட்' நாட்டிற்கு அனுப்பி விட்ட களிப்பில் ஊர் வந்து சேருகிறார். நாட்கள் வாரங்களை விழுங்கிக் கொண்டிருந்தன. மகளை கடல் கடந்த நாட்டிற்கு அனுப்பிவிட்டு நெருப்பை அள்ளி வயிற்றில் கட்டிக்கொண்டது போன்ற உணர்வுடன் காலம் தள்ளினாள் பாத்திமா.

ஏற்கனவே, பயங்கரவாதிகளின் நடமாட்டத்தாலும், ராணுவப் படையினரின் ஜீப்புக்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிவதாலும் ஏற்படும் சத்தங்கள் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் இவள் உள்ளத்தை மட்டுமல்ல அவ்வூரையே பாதித்திருந்தது. இருந்தாலும் இவைகள் அவ்வூர் மக்களுக்கு பழக்கப்பட்டிருந்தன. மக்கள் வழமையான அலுவல்களை பதட்டத்துடன் செய்துகொணடிருந்தார்கள்.

சின்ன மகன் குப்பி லாம்பின் வெளிச்சத்தில் திருக்குர்ஆனின் திருவசனங்களை அழகாக ஓதி ஓய்ந்துகொணடிருந்தான். இஷாத் தொழுகைக்கான 'அதான்' சத்தம் ஒலித்தது கேட்டதும் காதர் காக்கா வழமைபோல சின்ன மகனையும் அழைத்துக்கொண்டு பள்ளிவாசலை நோக்கி நடக்கிறார். இளைய மகள் குசினியில் ஏதோ சமைத்துக்கொண்டிருந்தாள்.

எல்லோருடனும் சேர்ந்து காதர் காக்காவும், மகனும் வுழுச் செய்துகொண்டு வரிசையில் தோளோடு தோளாக நின்று கொண்டார்கள். இமாம் தக்பீர் கட்டியதைத் தொடர்ந்து யாபேரும் தக்பீர் கட்டிக்கொள்ளுகிறார்கள். இமாம் வரிசைக் கிரமமாக தொழுகையை நடாத்திக் கொண்டிருந்தார்,

செக்கன்கள் நிமிடங்களாகிக் கொண்டிருந்தன. தாயும் சேயும் இரவுச் சாப்பாட்டை எடுத்து வைத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்றவர்களின் வருகைக்காக வழிமேல் வழிவைத்து ஆவலோடு எதிர்பார்த்து தலைவாசலில் காத்துக் கொண்டிருந்தார்கள் நேரம் எட்டு மணியைத் தாண்டவில்லை.

திடீரென பள்ளி வாசலின் திசையிலிருந்து ஒரு சத்தம்! சரிமாரியாக துப்பாக்கி ரவைகள் பொழிகின்ற சத்தம் அதனைத் தொடர்ந்தாற்போல் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் ....... ஒலிக்கிறது. பள்ளி வாசலினுள்ளே மரண ஓலங்கள் ஆமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிகழ்ச்சி ஊரையே மரண வீடாக்கியிருந்ததும் பயங்கரவாதிகள் முஸ்லிம் மக்களோடு கொண்ட வெறுப்பை பள்ளிவாயிலினுள்ளே புனித தொழுகையில் அல்லாஹ்வுக்காக சுஜூதில் இருந்த வேளையில் பின்புறமாக கோழைத்தனமாகவும், மிலேச்சத்தனமாகவும் இயந்திரத் துப்பாக்கி கொண்டு சுட்டுப் பொசுக்கிவிட்டார்கள். நூற்றுக்கும் அதிகமான சஹீதாக்கப்பட்ட ஜனாஸாக்களில் காதர் காக்காவும், சின்னப்பாலகனும் அடங்கியிருந்தார்கள்.

"இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" செய்தி ஊர் முழுதும் காட்டுத் தீபோல் பரவியது. செய்தி கேட்ட பாத்துமாவும், மகளும் அனலிடைப்பட்ட புழுப்போல் துடித்தார்கள், கதறியழுதார்கள். ஆறுதல் கூறுமளவிற்கு அவ்வூர் மக்கள் இருக்கவில்லைதான். ஒவ்வொரு வீட்டிலும் இதே கதறலதான் கேட்டது. ஜமாஅத்தாரின் பூரண உதவியுடன் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

நாட்கள் உருண்டோடி இரண்டு மாதங்களை விழுங்கி நின்றது. குவைட் நாட்டிலிருந்து மகளின் கடிதம் ஒரேயொரு முறை மாத்திரமே கிட்டியிருந்தது.

வாப்பா தம்பியினது அகால மரணச் செய்தியை கண்ணீரை நிரூபமாக்கி பதில் அனுப்பிவிட்டு மீண்டுமோர் மடலை எதிர்பார்த்திருக்கிறாள். பாத்திமா லுஹர் தொழுகைக்கான அதான் ஒலி கேட்டு சுய நினைவுக்கு வந்தாள். தொழுகைக்காக ஆயத்தமாகிறாள்.

தொழுகை முடிந்ததும் துஆப் பிரார்த்தனை செய்துவிட்டுத் திரும்புகிறாள். அப்போது இளைய மகள் அன்றையப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு ஓடோடி வந்து உம்மாவிடம் சோகத்தோடு படித்துக் காட்டுகிறாள். குவைட் நாட்டை ஈராக்கியப் படைகள் பிடித்துவிட்டதால் அங்குள்ள வெளிநாட்டுப் பணிப்பெண்களும், மற்றையவர்களும் அனாதைகளாக அலைமோதித்திரிகிறார்கள் எனவும் அவர்களில் சிலர் அன்னிய நாட்டுக்கு அபயம் தேடிச்சென்றுள்ளார்கள்; அவர்களை தாய் நாட்டிற்கு அழைக்க இலங்கை அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இச்செய்தியைக் கேட்டதும் மீண்டுமோர் பூகம்பம் அவள் தலையில் வெடிக்கிறது. அழுகிறாள் ஒப்பாரி வைக்கிறாள்; இவர்களைப்போன்ற எத்தனையோ பாத்திமாக்களுக்கு அழமட்டுமே முடிகிறது.

(இக்கதையின் பாத்திரங்கள் மட்டுமே கற்பனை: சம்பவம் உண்மை)



# நண்பர்கள்

- கெகுணகொல்ல மன்சூர்

பூவுலகில் படைக்கப்பட்ட படைப்புக்களிலெல்லாம் மிக உயர்ந்த படைப்பினமாக மனித இனத்தை இறைவன் படைத்துள்ளான். மனிதனை அவனது அடியானாக சிருஷ்டித்த இறைவன், ஆறறிவையும் இன்னும் பல விஷேச தன்மைகளையும் மனிதனுக்களித்ததுடன், ஏனைய அவனது படைப்புக்களிலிருந்து மிகவும் மேலானதாக்வும்; பண்பாட்டு ஒழுக்க நெறியுடையவர்களாகவும் மனித இனத்தை ஆக்கியுள்ளான்.

ஆனால் இவ்வாறாக படைக்கப்பட்டுள்ளமனிதன், இன்றைய காலகட்டத்தில் ஐயறிவு படைத்த மிருகங்களுக்கெல்லாம் கீழ்த்தரமானவனாக மாறிவிட்டான்என்றால் அதன் காரணங்கள் பல்வேறு விதத்தில் அமைந்துள்ளன. முக்கியமாக மனிதன் வாழக்கூடிய சூழ் நிலைகள் தான் அவனை ஒழுக்கமுள்ள நற்சீலனாகவும், கெட்ட முறையில் கீழ்தரமானவனாகவும் மாற்றுகின்றதென்பது தெளிவான உண்மையாகும்.

மனிதன் சமூகப்பிராணியாகவே படைக்கப்பட்டுள்ளான். எந்தவொரு படைப்பினத்தை எடுத்துக் கொண்டாலும், அவைகள் சமூகமாகவே ஒன்றிணைந்து, ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதே போன்றுதான் மனிதனும் தனியாக வாழமுடியாதவனாக இருப்பதால், சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். மனிதன் அவ்வாறு சமூக அமைப்பில் வாழும் போது, பல்வேறுஉறவு முறைகளால், பந்தங்களால் பிணைக்கப்படுகின்றான். பின்னர் அவைகளின் மூலம்தான் அவனது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. முக்கியமாக அவனது வாழ்வை சிறந்ததாகவோ, கெட்டதாகவோ மாற்றுகின்றன.

சமூகப் பிராணியான ஒவ்வொரு மனிதனுடனும் 'நண்பர்கள்' என்போர் ஒட்டிக் கொண்டிருப்பது மறுக்கமுடியாததாகும். இன்று முழுஉலகத்திலுமே ஒவ்வொரு வகையினரான சிறுவர்கள், வாலிபர்கள், முதியோர்கள், ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் நண்பர்கள் என்போர் இருந்து கொண்டேயிருக்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் நண்பனின் மூலமே தனது வாழ்வை இன்பமானதாகவோ, இருளடைந்ததாகவோ மாற்றிக் கொள்கின்றான். அதிகமாக சிறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், இளைஞர் யுவதிகள் தம்முடன் சேர்த்துக் கொள்ளும் நண்பர்கள் மூலமாகவே தமது எதிர்கால வாழ்வின் தாக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள் என்பது கண் கூடாகப் புலப் படக் கூடிய விடயமாகும். அவ்வாறான சம்பவங்கள் அன்று தொடக்கம் இன்று வரை சரித்திரத்திலே மலிந்து காணப்படு கின்றன. தமது நண்பர்களை தமது எல்லா விடயங்களிலும் சேர்த்துக் கொண்டு தமது அந்தரங்க விடயங்களிலும், பகிரங்க விடயங்களிலும் அரவணைத்துக் கொண்டு அகிலத்தார்களுக் கெல்லாம் படிப்பினையாக, ஒருயிரும் ஈருடலுமாயிருந்து அன்புப் பிணைப்பின் மூலம் தமது வாழ்வை வளம் படுத்திக் கொண்டவர் கள் இப்பாரினிலே நிறையப் பேர்!

மட்டுமா? நயவஞ்சகர்களையும், சுயநலவாதிகளையும், வெறும் பகட்டுக்காரர்களையும், கயவர்களையும் தமது நண்பர் களாக்கிக் கொண்டு, தமது இனிமையான வாழ்க்கையை, இகபரம் இரண்டிற்கும் பொருந்தாததாய் மாற்றி கீழ்த்தரமான கெட்ட பாதையெனும் ஆழியினுள் மூழ்கி பரிதாபமாக செத்துமடிந்த வர்கள் தான் எத்தனை எத்தனை பேர்!

எனவே அவ்வாறான நண்பர்களைப்பற்றி இன்னும் சிறிது விளக்குமுன்னர்; ''நேர்வழியின் துவக்கம்'' எனும் தமது நூலில் அறிவுலகப் பேரொலி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் நண்பர் களைப் பற்றி எழுதியுள்ளதை இவ்விடத்தில் எழுதுவது பொருத்தமென நினைக்கின்றேன்.

''அறிவுத் துறைகளிலும் சமய வழிபாடுகளிலும் லோகாயத விஷயங்களிலும் நம்முடன் ஒன்றி உறவாடும் ஒரு நண்பனிடம் ஐந்து சிறப்பியல்புகள் இருக்க வேண்டும்.

முதலாவதாக் அவன் நல்லறிவு படைத்தவனாக இருத்தல் வேண்டும். அறிவிலிகளுடன் அளவளாவுதலால் ஒரு நன்மையும் பிறவாது. வேற்றுமையும் பிரிவும் தான் அத்தகைய நட்பின் விளைவாக இருக்கும். மடையனான நண்பனைவிட மதியுள்ள விரோதி மேலானவன்.

இரண்டாவதாக், நண்பன் நம்மை ஈர்க்கும் தன்மையுடைய வனாகவிருத்தல் வேண்டும். இத்தன்மையில்லாதவன் தன்னடக் கம் உள்ளவனாக இரான். இவன் ஆத்திரத்திற்கும், வெறிக்கும் வெகு எளிதில் ஆளாகிவிடுவான்.



மூன்றாவதாக, நண்பன் உயரிய ஒழுக்கங்களைக் கொண்ட வனாக இருத்தல் வேண்டும். தொடர்ந்து பாவம் செய்யும் ஒரு தீயவனோடு நட்புக் கொள்ளுதல் கூடாது.

நான்காவ்து அவன் பேராசை பிடித்தவனாக இருத்தல் கூடாது. ஏனெனில் உலகப் பொருள்கள் மீதே ஆசை கொண் டலையும் ஒருவன் கொடிய நச்சாகும்.

ஐந்தாவது நம் நற்புக்கு உரியவன் உண்மை உடையவனாக இருத்தல் வேண்டும். நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாத ஒருவன் கானல் நீரைப் போன்றவன்.

இன்னும் நண்பர்கள் மூன்று வகைப்படுவர். மதத்துறையில் தோழனாக அமைபவர். உலக விஷயங்களில் நம்மோடு ஒத்து ழைப்பவர். தீமைக்கு இடமளித்து நெறிபிறழ வழிவகுப்பவர்.

முதல் வகை நட்பு உணவு போன்றது; வாழ்வுக்கு இன்றி யமையாதது. இரண்டாவது மருந்து போன்றது; சில சமயம் தேவைப்படும் மற்றச் சமயங்களில் அவசியமற்றது. மூன்றாவது நோய் போன்றது; அதன் தேவையே நமக்கு இல்லை. இவ்வாறு நற்புறவின் நிறைவு குறைகளைப் பற்றி ஆய்ந்து அலசி ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னரே வரைந்திருக்கின்றார்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்.

எனவே இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளபடி எமக்கு எமது நண்பர்களை தெரிவுசெய்துகொள்ள முடியும். எனினும் இன்றைய காலகட்டத்தில் அனைவரும் மேற்கூறிய இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதியுள்ள மூவகை நண் பர்களில் ஒரு வகையினரிடமாவது மாட்டிக்கொண்டு தமது வாழ்வை நல்லதாகவோ கெட்டதாகவோ மாற்றிக் கொண்டிருக் கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

எனவே நாமும் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறிய நண்பர்களின் வகையினுள், சிறந்த வகையினரான நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு எமது வாழ்வை சீர்படுத்திக்கொள்வதுடன் உயரிய ஒழுக்கங்கள் நிறைந்த மானிடராக வாழ்வோமாக!

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுகள் வெளியேறட்டும்

- நிந்ததாசன்

ஒரு பாலைவனம்
காத்திருக்கிறது
மழைக்காக.........!

யுத்த மேகங்கள்
இன்னும்
நித்திரைக்குப் போகவில்லை
பௌர்ணமி கூட
இந்த
மனக்கதவுகளை
திறக்கச் செய்யவில்லை!

தென்றல்
இங்கே
தீயையல்லவா கக்குகிறது
தீயும்
சத்தியாக்கிரகம் செய்துள்ளது
நிலைத்துக் கொள்ள

ஒரு பாலைவனம்
காத்திருக்கிறது
மழைக்காக.........!

வசந்தம்
கொள்ளையடிக்கப்பட்டதை
மனங்கள் தானே
ஆமோதித்துக் கொண்டன!
இங்கே
பகல்கள் கண் திறந்த போதும்
இரவுகள்
போர்த்திக் கொண்டிருப்பது
காரிருள்களையே!
மனித
அங்க ஆயுதங்கள்
வெண்புறாக்களைத் தேடாமல்
அநியாயங்களுக்கு
சைகை செய்கின்றன!

ஓ.................
மனித சாம்ராஜியமே,
தொலைந்து போனவைகளை
இன்னும் தேடாமல்
என்ன செய்து
கொண்டிருக்கிறீர்கள்!

## இவர்கள்

- கோவை அன்சார் - கொழும்பு

வசந்தகால கானங்களை
வரவேற்கத்
துடிக்கும்
இந்த
வண்ண மலர்கள்
வரதட்சனைக்
கோட்டைக்குள்
சிக்கி
வழி தடுமாறும்
வண்ண மலர்கள்

நீறு பூத்த நெருப்பின்
நிசப்தமாய் - திசை
தடுமாறிப் பயணமாகும்
பாலைவனத்து மரக்களம்
மண் வெளியை
நோக்கி
விரையும் வாழைக் குமரிகள்
வறுமைக் கோட்டின்
தாயகிகள்.



# அட்டைப் படம்

அட்டையை அலங்கரிப்பவரும் கேகாலை மாளட்டத்தில் மாறாத இலட்சிய நோக்கத்தோடு, சோர்ந்து போகாமல் துணிந்து நின்று, இலக்கியம் வளர்க்கும் ஓர் இலக்கியத் தொண்டன், 'ப்ரிய நிலா' என்ற கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் ஜனாப் உயன்வத்தை றம்ஜான் அவர்களிடம் புது நகரானின் சில கேள்விகள் நங்கூரம் வாசகர்களாகிய வளர்ந்துவரும் இளைய தலைமுறையினரின் இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டுமென நம்புகிறேன். (ஆ+ர்)

கேள்வி:- ஒரு சஞ்சிகை ஆசிரியர் என்ற ரீதியில் தங்களின் பேட்டியை நங்கூரம் சார்பாகப் பெறுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். தங்களின் எழுத்துலகப் பிரவேசமும் இலக்கியத் தேடலும் எப்போது ஆரம்பமானது?

பதில்:- நன்றி. நான் எனது பள்ளிப் பருவத்திலேயே எழுத ஆரம்பித்தேன். என்றாலும் மிக நீண்ட காலத்திற்குப் பிறகுதான் எனக்கு எழுதக் களம் கிடைத்தது. 80 களில் இலக்கியத் தேடலில் மிகத் தீவிரமாக ஈடுபட்டேன் அதன் பிறகு எழுதிய எல்லா ஆக்கங்களும் தினசரிகளில் பிரசுரமாயின.

கேள்வி:- தங்களின் இலக்கிய வளர்ச்சிக்கும், சஞ்சிகை வெளியிட வேண்டும் என்ற உணர்வுக்கும் உரமூட்டியவர்களுள் யாராவது பின்னணியில் இருந்துள்ளனரா?

பதில்:- தனிப்பட்ட முறையில இத்தகைய ஓர் முயற்சியை மேற்கொள்ளுங்கள் என்று யாரும் பின்னணியாக இருந்து தூண்டியது கிடையாது. ஆனால் சஞ்சிகை வெளியானதிலிருந்து இதுவரை எனது அபிமான வாசகர்கள், நெருக்கமான தொடர்புகளைக்கொண்ட எழுத்தாளர்கள், அபிமானிகள் உற்சாகமூட்டிக்கொண்டே உள்ளனர். இன்றேல் தொடர்ச்சியாக மூன்று வருடங்களை கடந்திருக்க மாட்டேனே!

கேள்வி:- இதுவரை தாங்கள் வெளியிட்டுவரும் 'ப்ரிய நிலா' சஞ்சிகை மூன்றாண்டுகளைக் கடந்துவிட்டன. இக்காலகட்டத்தில் சஞ்சிகை வெளியீட்டளவில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தைக் கூறுவீர்களா? (மபபா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்:- சஞ்சிகைகளை வெளியிட்டு வைப்பவர்களின் தியாக மனப்பான்மையையும், பொறுமையையும் சிரமங்களையும் எடைபோட்டுப் பார்க்கும் சிந்தனை சமூகத்தில் ஏற்படவில்லை என்பதையும், குறிப்பாக சிங்கள தமிழ் மக்களிடம் வாசிக்கும் பழக்கம், முஸ்லிம்கள் மத்தியில் இல்லை என்பதை அனுபவபூர்வமாக அறிந்துள்ளேன்.

**கேள்வி:-** வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர் உலகத்தில் அவர்களின் ஆரோக்கியமான இலக்கியம் வேறூன்ற தாங்கள் ஒரு இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் என்ற ரீதியில் வழங்கும் அறிவுரைகள் என்ன?

பதில்:- எழுதத் துடிக்கும் இளம் எழுத்தாளர்கள் நிறைய வாசிக்க வேண்டும். வாசித்தவற்றை சிந்திக்க வேண்டும். வெறுமனே, முன் கூறிய இரண்டு பழக்கங்களும் இல்லாமல் எழுத ஆரம்பித்து விடுவதால், எழுத்துலகில் நிலைத்துவிட முடியாது. நல்ல கருத்துக்களை உடையவர்களோடு கருத்துக்களை பறிமாறிக்கொள்ள வேண்டும். இரண்டொரு ஆக்கங்கள் பிரசுரமாகி விட்டால், தான் ஒரு எழுத்தாளனாகி விட்டேன் என்ற மமதையை, ஏற்படுத்திக்கொள்ளாது நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:-** உங்களுக்கு இலக்கிய எதிரிகள் உண்டா?

பதில்:- இல்லை. எனக்கு எதிரிகளாக இருப்பவர்களையும், நண்பர்களாக்கிக்கொள்வதில் முக்கியகவனம் செலுத்துவேன்.

**கேள்வி:-** சில பெண் எழுத்தாளர்கள் திடீரென மறைந்து விடுகிறார்களே! என்ன காரணம்?

பதில்:- நல்ல கேள்வி, சில ஆண்களும் தான், பெண்களும் தான் இலக்கிய உலகை அசுத்தப்படுத்தி விட்டார்கள். இலக்கியம் செய்ய வந்த சிலர் பொழுது போக்குக்காகப் பேனா பிடித்தார்கள். அவர்களது போக்குக்களும் நோக்கங்களும் பிழைத்தன. விலாசமில்லாமல் போய்விட்டனர். சிலரின் நடத்தைகள் சிலருக்கு விஷமாயின. அதனாலும் ஒய்ந்து விட்டார்கள். வேறு சிலர் குடும்பமாகி ஓரமாகி விட்டார்கள். ஆனால் ஆரோக்கியமான இலக்கிய சிந்தனை உடையவர்கள் அமைதியாக இருந்தாலும், அவர்களது உணர்வுகளும் உணர்ச்சிகளும் மங்கி விடவில்லை. இவை காலத்தின் கோலங்கள்.



# வாசகர் பக்கம்

## பேசும் இதயங்கள் ....

★ ''நங்கூரம்'' புரட்சிகரமான சஞ்சிகை வளரட்டும். நங்கூரத்தின் இலக்கிய சேவை வளரும் கலைஞர்கள் தமது கைவண்ணத்தைக்காட்டி அதன் பணி தொடர உதவுங்கள்.
— தினகரன் 28. 2. 1988 செல்வி ஏ. ராதா —

★ ''நங்கூரத்தின்'' முயற்சி பாராட்டுக் குரியதே. குறைகளற்று தொடர்ந்தும் 'நங்கூரம்' நல்ல தரமான சஞ்சிகையாக மிளிர வாழ்த்துகிறேன். — இர்பானா ஜெப்பார்

★ 'நங்கூரம்' முன்னேற்றப்படிகளில் இன்னும் கால் வைக்கவில்லை. அது படிகளில் பயணம் செய்யவில்லை? அதற்கான முயற்சிகளை ஆசிரியர் மேற்கொள்ளவேண்டும்.
— தினகரன் 20. 07. 1988 M. M. M. நூருல்ஹக்

★ அறிவுதரும் மருந்தென்று வாசகரும், வண்டமிழ் எழுத்தாளரும் போற்றும்வாறு காத்திரமாக விளங்கும் யதார்த்த மிகு படைப்புகளை உள்ளடக்கி இடையிற் தடையின்றி 'நங்கூரம்' என்னாலும் இதழ் விரித்தல் வேண்டுமெனச் செப்புகிறேன். — கவிஞர் A. R. நாகூர் திருகோணமலை.

★ 'நங்கூரம்' மிகப் பிரமாதம் 'வாழ்ந்திடு இஸ்லாம் வழியிலே' என்ற கவிதை பிரமாதம். அதேபோல் சிறுகதை மற்றும் அம்சங்களும் மிகவும் ஜோர். 'நங்கூரம்' வளர எனது வாழ்த்துக்கள். — கரீமா யூசுப் மாவனல்லை.

★ 'நங்கூரம்' 3 4 இதழ் கண்டேன். அதன் சிருஷ்டிகளுக்கு நீண்ட ஆயுட்காலம் உண்டு என்பதில் சிறிதேனும் ஐயமில்லை ஏனெனில்; பல தரமான படைப்புக்களை அது தாங்கியிருந்தது. மைதிலியின் ஓவியத்திற்கும் ஓர் சபாஷ். எனது நல்லாசிகள் பலகோடி,
— ஆஸாத் எம். ஹனீபா கல்முனை.

★ கதுறுவெலயிலிருந்து வெளிவரும் 'நங்கூரம்' இதழ் பல் வேறு சமகால நிகழ்வுகளைப் படம் பிடித்துக்காட்டுகிறது.
— வீரகேசரி 28. 08. 1988 இலக்கியச் சாரளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 'நங்கூரம்' காத்திரமான அம்சங்களை உள்ளடக்கி நாளைய சமூகத்தின் விடியலுக்காக சூரியனை சுமந்த தோள்களாக திகழ வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

— கலாவிஸ்வநாதன் கொழும்பு.

★ 'நங்கூரம்' 3, 4 ம் இதழை சுவைக்கக் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இதழில் சிந்திக் கிடந்த அனைத்து ஆக்கங்களும் பாராட்டக்கூடியவையே. சிறந்த ஆக்கங்களுடன் மலரும் 'நங்கூரமே' உன் பணி தொடர வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

— செல்வி நஸீரா குதுபுடீன் கல்ஹின்னை.

★ 'நங்கூரம்' கண்டேன். முயற்சிக்கு நேசபாராட்டுக்கள்? 'நங்கூரம்' இன்னும் கவர்ச்சியில் அமைப்பில் நிறைய வளர வேண்டும். காலம் கடந்தாலும் பொறுமையாக நின்று இனிமையாக சஞ்சிகையை வெளியிடுங்கள். நிச்சயம் வெற்றி கிட்டும்.

— ஆசிரியர் 'பூமி'

— தாஜுடீன் எம். அன்வர்-காலி

★ 'நங்கூரம்' பிரதி கண்டேன். நல்லதோர் முயற்சி. ஆக்கங்கள் யாவும் வெரி பெண்டாஸ்டிக். அமைப்பு முறையில் சிறிது மாற்றம் தேவை. முயற்சிக்கு எமது புரட்சிகரமான வாழ்த்துக்கள்.

— விருதோடை முஸப்பிர், கலை இதழ் ஆசிரிய பீடம்.

★ தற்போது வெளிவருகின்ற நல்ல தரமான ஒருசில ஏடுகளில் 'நங்கூரமும்' சேருகிறது.

— தினகரன் 12. 02. 1989 திரேசா சியாமளா.

★ 'நங்கூரம்' சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் படைப்புகளுடன், முற்போக்குவாத இலக்கியத்தோடு சற்று வித்தியாசமான பாதையில் முன்னேறிச் செல்கிறது.

— தினகரன் 12. 03. 1989 இலக்கிய உலகம்

— A. C. M. முஹாஜிரீன்,

நல்வாழ்த்துக்கள் ! ! !

**NEW TEA STORES**

Dealers in Tea & Ceylon Products

33, Main Street,

Kaduruwela, Polonnaruwa.



# ஒரு காதல் பற்றிய கதை

— இப்னு அஸூமத்

காதலியே...............
ஈரப் பூந்தோட்ட
ஓர இடுக்கில்
விழிகளைக் கழற்றி
விரித்துத்
தாலாட்டத் துடிக்கும்
நாயகியே!

என் விரல் மடித்து
சொடுக்கு ராகம்
இசைக்கும்
தேச வாசமே.........
நேச ஆகாசமே.........

இந்தத்
தீயினை ஏன்
தீண்டிக் கொண்டாய்?

ஓ
மென்மைக் குளிர்
கூடுதல் என்றுமா?

எமது
தேசம் போல்
தீப்பிடிக்க ஆசையா?

தீவைத்துத் தீவைத்துத்
தீயிக்கே
தீவைத்த தீவில்
உறுப்புகளை
உடைத்துக் கொடுத்த
எங்கள்
மக்களின் மேடுகளில்
நாம் இருந்து
காதல் உயிர்க்கிறோம்!

யேய்..............
இதெல்லாம் செய்வதற்கு
நமக்கு
வழிவிட்ட
மக்களைப் பார்.........
மாண்டு விட்ட
மக்களைப் பார்......

அவர்களின்
சவங்களின் மீதிருந்து
காதலிக்கின்றோம்.........

சுடுகாட்டில் காதலிக்கும்
சுதந்திரம்
பெற்றுள்ளோம்.

அஞ்சாதே
வீட்டிலிருந்து தான்
காட்டுக்குப் போகும்
பிணம்

இந்தக் காதல்
காட்டில் இருந்து
வீட்டுக்கு வரும்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**National Hardware Stores**

Agents for Delmage Paints
Delmage Forsyth & Company (Paints) Ltd.

KADURUWELA,
POLONNARUWA.
T. P. 027-2345

"ஒரு நவயுக விடியலுக்காய் பூபாளம் பாடும் நங்கூரமே
நீ உதயங்கள் பல காண வாழ்த்துகிறோம்"

★ நம்பிக்கை ★ நாணயம் ★ நவநாகரீகம்

**Al-Rajhi Jewellers**

Leading House for Modern Jewellers 22 Carat

MAJEED SUPER MARKET,
614/1, MAIN STREET,
KADURUWELA - POLONNARUWA.

முதலாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும்
"நங்கூரம்" இலக்கிய உலகில் சரித்திரம் படைக்க
வாழ்த்துகிறோம்!

**Tata Timber Depot**

All Kind of Building Materials & Sawn Timber

606, MAIN STREET,
KADURUWELA - POLONNARUWA.

ஈழத்து இலக்கியப் பரப்பில் நங்கூரம்
பல தசாப்தங்கள் காண வாழ்த்துகிறோம்!

**City Shoe Palace**

Dealers in Footwear & Bags

11, MAIN STREET,
KADURUWELA,
POLONNARUWA.

*M. J. M. PRINTERS — MAWANELLA.*



## ★ பொசுங்கட்டும் ★

திரையிட்டும் சிறையிட்டும்
பர்தா என்ற போர்வைக்குள்
வாழவேண்டிய பாவைகள்
இன்று தெருவெங்கும் நடமாட்டமா?
இஸ்லாமிய தாய் தந்தையருக்குப்
பிறந்து இன்றைய சமுதாயத்தில்
அன்னியவளாக உருமாறி
தெருவெங்கும் நடமாட்டமா?
தன் மேனி அழகை ஆண்
வர்க்கத்திடம் திரை இன்றி
ஏலம் போடும் சமூகப் பெண்கள்
குலையட்டும்!
பர்தா என்ற போர்வை அதை
கிழித்துவிட்டு குளிர் காயும்
அந்த அஸ்தமனப் பாவைகள்
பூவறைக்குள் பொசுங்கட்டும்!

— ஷாஹிர்வுரா தாஸீம்
தர்ஹா நகர்.

## வாழ்த்துகிறோம்!

தடாகத்தின் ஆசிரியை கலைமகள் ஹிதாயாவுக்கும் பொல்கஹவலையைச் சேர்ந்த ஜனாப் M. ரிஸ்விக்கும் இடையில் சென்ற 30. 12. 1990 ல் திருமணம் நடைபெற்றது குறித்து 'நங்கூர' வாசகர் சார்பாகவும், 'ப்ரிய நிலா' வாசகர் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நங்கூரம், ப்ரிய நிலா ஆசிரியபீடம்

குறிப்பு:

தடாகத்தோடு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
கலைமகள் ஹிதாயா ரிஸ்வி
84, வெளிகடஹேன, பொல்கஹவெல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்பு மழை!

சிவப்புச் சூரியன்
சொரிந்து கொள்வதும்
செங்கதிர்களையே.

கரை புரண்டு
அலைமோதும்
நீலக் கடலும் - இங்கு
செங்கடலாகிறதே!

துப்பாக்கிகள்
அடிக்கடி
'ரவை'யைப் பொழிவதால்
சமாதானத் தாகம் கொண்ட
மானிடம்
குருதி மழையில்
புரண்டு கொள்கிறதே!

எமது
தேசிய மண்ணில்
புதைந்து கிடப்பது
மானிட
குருதியின் மகசுகளோ!

அதனால் தானோ?
எமது 'மண்'ணும்
அடிக்கடி
சிவப்பாகிறதோ?

— M. C. முஹாஜிடீன்
கல்ஹின்னை.

## ஒற்றுமை ...

என்
தோழி வீட்டாரின்
சட்டையில்
கறை படிந்து விட்டதாம்
வலை வீசி
என்ன கறையென,
தேடிக் கொண்டிருக்கையில்
அது
இனவாதம் கலந்த,
இரத்தக் கறை
என
முத்திரை குத்தி
காட்டியது!

பயங்கர இரத்தக்கறையை
அழித்திட
'கண்டெடுத்த பல'
இரசாயணக் கலவைகளை
பயன் படுத்தினோம்!
பலனில்லை?
இறுதியில்
ஒற்றுமைக் கலவையை
கலந்து
பூசிப்பார்த்தோம்!
ம்..................
பலன் கிடைத்தது.
ஆம்
ஒற்றுமையால்
இரத்தக்கறை
அகன்றுவிட்டது.

பாராதாஷிர்


*With Best Compliments From*

**CENTRAL HARDWARES**

56, MAIN STREET,
KADURUWELA - POLONNARUWA.
Telephone: 027 2297

*With Best Compliments From*

**SHAMILAS**

Stockist for HARCROS
51, Main Street.
Kaduruwela - Polonnaruwa.
T. P. 027-2084

விடியல் காண வாழ்த்துகிறோம்!

**Al-Haj S. T. S. Ahamed & Sons**

Rice Millers, Agents for Petrolium Corporation
KADURUWELA,
POLONNARUWA.
T. P. 027-2013

இலக்கியம் வளர வாழ்த்துகிறோம்!

**NOORIE JEWELLERS**

612/7, Main Street.
Majeed Super Market.
Bank of Ceylon Upstair,
Kaduruwela - Polonnaruwa. T. P. 027-2086

*With Best Compliments From*

**NEW CITY HARDWARE**

359, Main Street,
Kaduruwela - Polonnaruwa.
T. P 027-2273


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*From*

# S. T. S.
# Hardware Stores

GENERAL HARDWARE MERCHANTS

Dealers in All Electricals Items,
P. V. C. Pipes & Fittings Etc.
Authorised Dealers C. I. C. Paints
Building Material Corporation
Photo Copying Service Etc.

**Kaduruwela - Polonnaruwa.**

T. P. 027-2147
Fax. No. 027-2147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org